## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு - 2013

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 37 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று ஆணைக்குழுவின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள்

கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2 நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொத்தொன்றை பயன்படுத்துவதற்காக தகைமை பெற்ற சந்தர்ப்பத்திலிருந்து சொத்தின் பயன்படு ஆயுட்காலம் முழுவதும் காலரீதியான அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவால் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் பெறுமானத் தேய்வு செய்யப்படாத கொள்கையைப் பின்பற்றுவதனால் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 74,983,695 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றிற்காக பெறுமானத் தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரயாணிகள் போக்குவரத்துக் கம்பனிக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 671,846 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் என்பவற்றை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனைத்து மாகாணங்களின் பேரூந்துகளில் பொருத்துவதற்காக மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளின் போதும் கொள்வனவு

செய்யப்பட்ட ஜீ.பீ.எஸ் உபகரணங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 13,231,854 தொகை கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக பற்றாக்குறை அப்பெறுமானத்தால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) வவுனியா பஸ் நிலைய நிர்மாணத்தின் ஒப்பந்தத்திற்கு உரித்தாக 2014 சனவரி 01 ஆம் திகதி செலுத்தப்பட்ட ரூபா 21,349,943 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத்தை எதிர்வரும் ஆண்டிற்கு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் கொடுக்கல்வாங்கலொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) ஆணைக்குழுவினால் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 364,479 ஆன செலவினம் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், முதலீட்டிற்காக வங்கியால் வழங்கப்பட்ட ரூபா 315,999 ஆன வட்டி வங்கியால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதும் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் முதலீட்டுப் பெறுமதி ரூபா 170,176,087 ஆக இருந்ததுடன், அதன் அடிப்படையில் கிடைத்த வட்டி மீண்டும் முதலீடு செய்யப்பட்ட போதிலும், முதலீடாக கிடைத்த வட்டி கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கிடைக்க வேண்டிய வட்டிக் கணக்கில் உட்படுத்தப்பட்டிருந்தது. வங்கி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் பெற்ற வட்டி ரூபா 9,533,912 ஆக இருந்த போதும் பெறவேண்டிய வட்டியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெறுமானம் ரூபா 8,877,359 ஆக இருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்புக்களில், குறுங்கால வைப்புக்கள் மற்றும் அழைப்பு வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் முறையே ரூபா 16,525,336 தொகை ரூபா 170,176,087 தொகை மற்றும் ரூபா 8,400,591 தொகை என்பன முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டினையும் உரிய அமைச்சரின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

| | |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 9 ஆவது பிரிவு | (i) கடமைகளுக்காக வெளிநாடு செல்லும் உத்தியோகத்தர் ஒருவருக்கு 75 பவுன்களுக்குச் சமமான சூடான உடைகளுக்கான படிகள் ரூபாவில் செலுத்தப்பட வேண்டிய போதிலும், 07 உத்தியோகத்தர்களுக்காக இரண்டு சந்தர்ப்பங்களில் 861 அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டிருந்தது. |
| | (ii) சூடான உடைகளுக்கான படிகள் குளிர் காலநிலை உள்ள நாடுகளுக்காக மாத்திரம் செலுத்த முடியுமான போதிலும், அவ்வாறான காலநிலை நிலவாத சீங்கப்பூருக்குச் செல்வதற்காக இந்த சூடான ஆடைகளுக்காக படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு தடவையில் வழங்கப்படக்கூடிய முற்பணத் தொகை ரூபா 20,000 ஆக இருந்த போதிலும், ரூபா 87,600 முதல் ரூபா 455,000 வரை முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப் பிரமாணம் 1646 | ஆணைக்குழுவின் வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டப் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த ஒவ்வொரு வாகனத்திற்கும் பெற்றுக் கொண்ட எரிபொருள், பயன்படுத்தப்பட்ட எரிபொருள், தாங்கியில் எஞ்சியிருக்கும் எரிபொருளின் அளவினைக் காண்பிக்கும் வகையில் எரிபொருள் சமப்படுத்தல் மேற்கொள்ளப்படாமல் இருந்ததுடன், அந்த ஓட்டப் பதிவேடுகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்களின் மூலப் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 1647 | ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக உள்ள வாகனங்களின் பாதுகாப்பு தொடர்பான மாற்றங்கள் சம்பந்தமான அறிக்கைகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஆணைக்குழுவிற்குச் சொந்தமான ஒவ்வொரு வாகனம் தொடர்பாக 06 மாதங்களுக்கு ஒரு முறை எரிபொருள் நுகர்வினை தகைமை பெற்ற ஒரு நபரைக் கொண்டு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 26/92 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | தனிப்பட்ட பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்கள் தவிர ஏனைய அனைத்து வாகனங்களிலும் அரச இலட்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் என்பன பொறிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய (IAI/2002/02) ஆம் இலக்க திறைசேரி சுற்றிக்கை | கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக புறம்பான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கொள்வனவு செய்யப்படுகின்ற சொத்துக்கள் பட்டியலில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கு சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப் பட்டிருந்த போதிலும், வருடாந்த பெறுமானத் தேய்வு, பெறுமதி அதிகரிப்பு அல்லது கைதவிர்த்தல்கள் என்பன வெவ்வேறாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2013 நவம்பர் 04 ஆம் திகதிய எப்பீ/06/35/02/01 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை | ஆணைக்குழுவில் மாதந்த சம்பளம் ரூபா 50,000 ஐ மிகைத்த உத்தியோகத்தர் களிடமிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2006 இன் அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவை | |
| | (i) 2.11.1 (இ)பிரிவு | 25 பிரயாணிகள் தரிப்பிடங்களை நிர்மாணிப்பது தொடர்பான முதலாவது கூட்டம் கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு என்பன ஒன்றிணைந்து நடாத்தியிருக்கவில்லை. |
| | (ii) 4.2.3 (இ) பிரிவு | ஆணைக்குழுவால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகள் தொடர்பாக கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டு கொள்வனவுக் குழு மூலம் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | 4.3.1 மற்றும் 4.3.2 ஆம் பிரிவுகள் | பிரயாணிகள் தரிப்பிடங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக கிரய மதிப்பீடொன்று தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 6.2.2 ஆம் பிரிவு | நீண்டதூர பயண சேவைகள் பிரயாணிகள் தரிப்பிட நிர்மாணம் தொடர்பாக கேள்வி கோரலுக்கான ஆகக் குறைந்த காலமான 21 நாட்கள் கேள்விதாரருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 8.9.1 ஆம் பிரிவு | ஆணைக்குழுவினால் ஒப்பந்தக்காரர்களுடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதி விளைவுகள் ரூபா 181,195,469 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,680,681 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 183,876,150 தொகையான வீழ்ச்சி சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன், விசேட செயற்திட்டங்கள், தாபன, சட்டம், பத்திரிகை அறிவித்தல்கள், பெறுமானத் தேய்வு மற்றும் ஏனைய செலவினங்கள் என்பன 29 சதவீதத்திலிருந்து 69 சதவீதம் வரையான வீச்சில் அதிகாரித்திருந்தமை இதற்கு காரணங்களாக இருந்தன.

### 3.2 நிறுவனத்திற்கெதிராக அல்லது நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 15 வெளிநிறுவனங்களால் நேர அட்டவணைகள் பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள், பஸ் கட்டண மீளமைப்பு, பேரூந்து நிறுத்துமிட வசதிகள், பேரூந்து ஊழியர்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக நீதிமன்றங்களில் 15 வழக்குகள் ஆணைக்குழுவிற்கு எதிராக தொடரப்பட்டிருந்தன.

(ஆ) ஆணைக்குழுவால் நேரஅட்டவணைகள், பேரூந்து நிறுத்துமிடங்களை கையளித்தல், பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள், பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரம் இல்லாமல் ஓட்டத்தில் ஈடுபட்டமை, கெமிசெரிய, சிசுசெரிய, உதவுதொகைகள் கொடுப்பனவு தொடர்பாக நிறுவனங்களுக்கு எதிராக 10 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பஸ் ஓட்டுனர் பேரூந்து ஓட்டத்திற்காக கருத்திற் கொள்ளாத சிக்கனமற்ற கிராமிய வீதிகளில் பேரூந்து ஓட்டத்தை ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டு நடாத்திச் செல்லப்படுகின்ற கெமிசெரிய சேவைகள் செயற்திட்டத்தின் கீழ் முன்னைய ஆண்டின் இறுதி வரையில் 21 பேரூந்துகள் ஓட்டத்தில் ஈடுபட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் மேலும் 50 புதிய பேரூந்து சேவைகள் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 19 சேவைகள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மேலும் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் சேவைகளை வழங்காமையால் காணப்பட்ட 09 சேவைகளின் அனுமதிப்பத்திரங்கள் செல்லுபடியற்றாக்கப்பட்டதுடன், ஆண்டின் இறுதி வரையில் செயற்படுத்தப்பட்ட மொத்த பேரூந்துகளின் எண்ணிக்கை 31 ஆக இருந்தது. வருடாந்தம் புதிய சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், மேற்குறித்த காரணங்களால் ஆணைக்குழுவின் இலக்கை நோக்கி அடைய முடியாமல் இருந்தது.

(ஆ) இரவு காலங்கள் உட்பட நள்ளிரவு, அதிகாலை பேரூந்து சேவைகளில் காணப்படும் பற்றாக்குறையால் பிரயாணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களை நீக்கி அவர்களுக்கு பொது போக்குவரத்து சேவையொன்றை வழங்கும் நோக்கில் நிசிசெரிய பேரூந்து சேவைக்காக மீளாய்வாண்டின் தொடக்கத்தில் 123 பேரூந்துகள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், ஆண்டின் போது 75 புதிய பேரூந்து சேவைகள் ஈடுபடுத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 42 சேவைகளை மாத்திரம் ஆரம்பிப்பதற்கு முடியுமாக இருந்தது. ஆண்டின் போது நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் சேவைகளை வழங்குவதற்கு தவறியமையால் 31 சேவைகள் செல்லுபடியற்றதாக்கப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதி வரையில் ஓட்டத்தில் ஈடுபடுத்த நிர்ணயிக்கப்பட்டிருந்த மொத்த பேரூந்துகளின் எண்ணிக்கை 134 ஆக இருந்த போதிலும், 111 பேரூந்துகள் மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் போது நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த நுவரெலியா, உடுபுஸ்ஸல்லாவ, ஹைபொரஸ்ட், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய 07 பேரூந்து நிலையங்களுக்காக காணிகளை தீர்த்துவைத்தல், திட்டங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையால் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாமல் இருந்தன. மேலும் நுவரெலியா நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை 2014 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கும் உடுபுஸ்ஸல்லாவ மற்றும் ஹைபொரஸ்ட் நிர்மாண நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கும் மீண்டும் திட்டமிடப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 35 நீண்டதூர சேவை பிரயாணிகள் தரிப்பிடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 10 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது 25 பிரயாணிகள் தரிப்பிடங்களை மாத்திரம் நிர்மாணிப்பதற்காக கேள்வி

கோரப்பட்டு 13 மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 2,883,240 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நுவரெலியாவிலிருந்து கொழும்பு மற்றும் வேறு பிரதேசங்கள் வரை ஓட்டத்தில் ஈடுபடும் பேரூந்துகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைககளின் பிரகாரம் 19 வீதிகளுக்காக 44 பேரூந்துகளுக்கு தேவைப்பாடு காணப்பட்ட போதிலும், அதில் 10 அனுமதிப்பத்திரங்களுக்காக விலைமனுக் கோரலுக்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு 05 இற்கு மாத்திரம் விலைமனு கோரப்பட்டிருந்தது. 2014 ஒக்தோபர் 31 ஆம் திகதி வரையில் மேலும் 02 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பேரூந்து உரிமையாளர்கள் முன்வராமை மற்றும் முன்வந்தவர்களிலும் தகைமைகள் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் காணப்படாமை போன்ற காரணங்களால் இரண்டு அனுமதிப்பத்திரங்களை மாத்திரம் வழங்குவதற்கு முடியுமாக இருந்ததாக தலைவரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இரண்டு மெய்மையாய்வுகளின் மூலம் கண்டறியப்பட்ட தகவல்களின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேலும் 06 வீதிகளுக்காக 07 அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்காக கேள்வி மூலம் மனுக் கோரப்பட்டிருந்ததுடன், 2014 ஒக்தோபர் இறுதி வரையில் 04 பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. நிர்ணயித்த விலை விபரங்களின் பிரகாரம் வீதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பேரூந்து செயற்பாட்டாளர்கள் முன்வராமை போன்ற காரணத்தினால் நான்கு வீதி அனுமதிப்பத்திரங்கள் மாத்திரம் வழங்குவதற்கு நேர்ந்ததாக தலைவரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(இ) கொழும்பு – குச்சவெளி வீதிக்காக இரண்டு வீதி அனுமதிப்பத்திரங்களுக்காக கிடைத்த விலை விபரங்களுக்கிடையே கூடிய மனுவை சமர்ப்பித்த விண்ணப்பதாரி அந்த அனுமதிப்பத்திரத்தை பெறுவதை நிராகரித்திருந்ததுடன், இரண்டாவது கூடிய விலையை சமர்ப்பித்த விண்ணப்பதாரிக்கு நிராகரித்த விண்ணப்பதாரியின் விலைக்கே அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு செய்யப்பட்ட முன்மொழிவுக்கு இணங்காமையால் அந்த அனுமதிப்பத்திரத்தை கூடிய விலைக்கு அவருக்கே வழங்குவதற்கு முயற்சி செய்தமையால் அதனை விநியோகிப்பதற்கு 2013 திசெம்பர் 26 ஆம் திகதி வரை தாமதமாகியிருந்தது. பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களுக்காக கேள்வி கோரும் போது கேள்வி வைப்பொன்று வைக்கப்பட்டிருந்தால் இவ்வாறு நிராகரித்தல்களின் போது ஏற்படும் நட்டத்தை குறைப்பதற்கு முடியுமாக இருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன், இவ்வாறு நிராகரிக்கப்பட்ட நபர்களுக்கு மீண்டும் அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்ள முடியாத வகையில் அவர்களின் பெயர் கறுப்பு பட்டியலிலும் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சிசுசரிய செயற்திட்டத்தின் கீழ் போக்குவரத்து சிரமங்கள் உள்ள பாடசாலை மாணவர்களுக்காக இலவசமாக மிதி வண்டிகளை பகிர்ந்தளிப்பதற்காக 2012 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மிதிவண்டிகள் பல்வேறு குறைபாடுகளுடன் வழங்கப்பட்டிருந்ததுடன், அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு உரிய வழங்குனருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், எவ்வித பதிலையும் அறிவிக்காதிருக்கையில் 2013 ஆம் ஆண்டிற்காகவும் அந்நிறுவனத்திடமிருந்து மேலும் 2250 மிதி வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அவைகளும் குறைபாடுகளுடன் வழங்கப்பட்டிருந்தன. இவ்வாறான குறைபாடுகளுடன் கூடிய மிதி வண்டிகளை மீண்டும் வழங்குனருக்கு அனுப்புவதற்குப் பதிலாக அதற்காக செலுத்த வேண்டிய தொகையில் ஒரு சதவீதம் அளவில் கழித்துக்கொண்டு பணம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மிதி வண்டிகள் உட்பட மீளாய்வாண்டின் போது ரூபா 28,750,150 பெறுமதியான 3050 மிதி வண்டிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன், அம்மிதி வண்டிகளை பொறுப்பேற்றதாக குறித்த மாணவர்கள் கையொப்பமிடப்படாதிருந்தமையால் இம்மிதி வண்டிகள் குறித்த மாணவ மாணவிகளுக்கு ஒப்படைக்கப்பட்டதை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பிலிருந்தும் வெளி மாகாணங்களிலிருந்தும் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்கள் வரை பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்கு 10/2374/445/077 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரம் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் கீழ் 2012 மே 31 ஆம் திகதியின் பின்னர் அனுமதிப்பத்திரத்தை வழங்காமல் இருப்பதற்கு 2012 மார்ச் 22 ஆம் திகதிய பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கு முரணாக 2012 யூன் மற்றும் யூலை மாதங்களில் விநியோகிக்கப்பட்டிருந்த இரண்டு பிரயாணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக எனது 2013 ஏப்ரல் 22 ஆம் திகதிய RT/B/NTC/13 ஆம் இலக்க கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருக்கையில் இலஞ்ச மற்றும் ஊழல் புலானாய்வு ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட பரிசோதனையின் போது இதன் பின்னர் அந்த பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக எழுத்து மூலம் உறுதி அளித்திருக்கையில் மீளாய்வாண்டினுள் அந்த அமைச்சரவைத் தீர்மானத்தின் கீழ் மேலும் இரண்டு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 2013 திசெம்பர் 09 ஆம் திகதிய 01/2013(i) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு ஊழியருக்கு ரூபா 12,500 வீதம் உபகாரக் கொடுப்பனவொன்றை இலாபம் உழைத்த அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அதற்குச் சமமான நிறுவனங்களுக்கு மாத்திரமே முடியுமாக இருந்த போதிலும். கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் ரூபா 181,195,469 தொகையான திரண்ட நட்டமொன்றை பெற்றுக்கொண்டிருந்த போதும் முழுமையான உபகாரக் கொடுப்பனவும் செலுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து

உருவான இலாபம் ரூபா 163,772,129 எனவும் அந்த இலாபத்தை அடிப்படையாகக் கொண்ட உபகாரக் கொடுப்னவு செலுத்தப்பட்டதாக தலைவரால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

### 4.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

கொட்டாவ - மாத்தறை அதிவேக நெடுஞ்சாலைக்காக பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் விநியோகிப்பதற்காக 27 விலை மனுக்கோரல் அறிவித்தலை மேற்கொள்வதற்காக ரூபா 295,215 தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக எந்தவொரு விண்ணப்பமொன்றும் விநியோரிக்கப்படாதிருந்ததுடன், பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திர விநியோகம் இடம்பெற்றிருக்கவில்லை.

### 4.5 ஒப்பந்த நிர்வாகித்திலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலவாக்கலை பேரூந்து நிலையத்தை இரண்டு கட்டங்களில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதில் முதலாம் கட்டத்திற்கான மதிப்பீடு ரூபா 31,389,340 ஆக இருந்ததுடன் இநநிர்மாண நடவடிக்கைகள் தலவாக்கலை நகர சபையால் வழிநடாத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுள் அவதானிக்கப்பட்டன.

(i) மூன்று மாடிகளுடன் கூடிய இக்கட்டிடத்திற்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 37,861,728.30 தொகையான வரி இல்லாமல் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், இது இரண்டு கட்டங்களில் நிர்மாணிப்பதற்கு தீர்மானித்திருந்தமையால் கீழ் மாடியை மாத்திரம் மீண்டும் தலவாக்கலை நகர சபையால் ரூபா 31,389,340 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் முறையாக அங்கீகரிக்கப்பட்ட இம்மதிப்பீடு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) ஒப்பந்த நடவடிக்கை மேற்கொள்ளும் போது ஏதேனும் மேலதிக வேலைகளைச் செய்வதற்கு நேர்ந்தால் அவ்வேலையை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதற்காக ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் 2014 சனவரி 31 ஆம் திகதி வரை சான்றுறுதிப்படுத்தப்பட்ட ரூபா 3,614,369 தொகையான மேலதிக வேலைக்காக அச்செயற்பாடு நிறைவு பெற்றதன் பின்னரே அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்தம் 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2014 ஏப்ரல் 23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 செப்தெம்பர் மாதம் வரையில் செயற்பாடு பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன், ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமதமான ஒரு நாளைக்கு ரூபா 7,149 வீதம் 159 நாட்களுக்காக ரூபா 1,136,691 ஆன தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பஸ்டியன் மாவத்தை பேரூந்து நிலையத்தில் நேர அட்டவணைகளைக் காட்சிப்படுத்துவதற்காக ரூபா 14,418,000 தொகை செலவு செய்யப்பட்டு எல்ஈடி திரையொன்று பொருத்தப்பட்டிருந்ததுடன் இக்கொடுக்கல் வாங்கல்களை நடைமுறைப்படுத்தும் போது பின்வரும் குறைபாடுகள் இடம்பெற்றிருந்தன.

(i) எல்ஈடி திரை கொள்வனவு செய்யப்பட்டு பொருத்துதல் தொடர்பாக கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.2 மற்றும் 4.2.3 ஆம் பந்திகளின் பிரகாரம் கொள்வனவு கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையால் இச்செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதி முதல் கூறு விலை விபரங்கள் கோரலுக்காக ஓராண்டு காலம் மட்டில் கடந்திருந்தது.

(ii) எல்ஈடி திரை பொருத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விலை விபரங்களுக்கிடையே ஆகக்குறைந்த விலை விபரங்களைச் சமர்ப்பித்த நான்கு நிறுவனங்களும் இச்செயற்பாட்டு தொடர்பாக முன் அனுபவம் இல்லாத நிறுனங்களாக இருந்தமையால் அதற்காக ஐந்தாவது ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்தை தெரிவு செய்யவோ அல்லது அனைத்து விலை விபரங்களையும் செல்லுபடியற்றதாக்கி மீண்டும் விலை விபரங்களை கோர முடியுமாக இருந்த போதிலும், அவ்வாறு செய்யாமல் ஆகக்குறைந்த விலை விபரங்களைச் சமர்ப்பித்த நிறுவனத்தைக் கொண்டே இந்த வழங்கல் தொடர்பாக முன்வைத்து (Presentation) அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(iii) வழங்குனர் குறிப்பிட்ட காலப்பகுதியில் முறையாக ஆணைக்குழுவுடன் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு சமூகமளிக்காததால் அச்சந்தர்ப்பத்திலேயே ஒப்பந்தத்தை இரத்துச்செய்து புதிய விலை மனுவை கோர முடியுமாக இருந்த போதிலும் அவ்வாறு செய்யாமல் அதற்கு 03 மாதங்களின் பின்னர் அக்காரணத்தை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்தத்தை இரத்துச்செய்து மீண்டும் விலை மனுக் கோரப்படாமல் அரச கூட்டுத்தாபனமொன்றிற்கு ரூபா 14,418,000 விலைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது முன்னர் சமர்ப்பித்த ஆகக் குறைந்த ஐந்தாவது விலையை விட ரூபா 5,378,444 கூடுதலாக இருந்தது.

(iv) ஆரம்ப ஒப்பந்தக்காரர் செயற்பாட்டை நிறைவேற்றாமையால் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் பிணைப்பொறுப்பினை குறித்த காலப்பகுதியில் காசாக மாற்றுவதற்கு ஆணைக்குழு தவறியமையால் அதன் காலம் கடந்திருந்தமையால் அதனை காசாக்குவதை வங்கியால் நிராகரித்திருந்ததுடன், அதற்காக சட்ட ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தது.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

அங்கீகரித்த பதவியணியினரை உள்ளபடியான பதவியணியினருடன் ஒப்பீடுசெய்யும் போது 61 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இதில் 19 பதவிகள் நிறைவேற்றுதரத்திலான பதவிகளாக இருந்தன.

## 4.7 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சம்பளத்தை மீள் நிரப்பல் என்ற அடிப்படையில் இலங்கை போக்குவரத்து சபைக்கு இரண்டு சாரதிகள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை ஒரு சாரதியிடமிருந்து 04 மாதங்களுக்காக ரூபா 106,542 தொகையும் ஏனைய சாரதியிடமிருந்து ஒரு மாதத்திற்காக ரூபா 12,229 ஆக மொத்தம் ரூபா 118,771 தொகை மீள்நிரப்பப்பட வேண்டியிருந்தது.

(ஆ) நுவரெலியா மாவட்டத்தினுள் ஓட்டத்தில் ஈடுபடும் பேரூந்துகள் தொடர்பாக தனியார் போக்குவரத்து அமைச்சிற்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக 2013 யூன் 08 அம் திகதிய இலக்கமற்ற தனியார் போக்குவரத்து அமைச்சரின் தனிப்பட்ட உதவியாளரின் கடிதத்தின் மூலம் செய்யப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குரிய வான் வண்டியொன்று 2013 யூன் 13 ஆம் திகதி முதல் 2013 யூலை 15 ஆம் திகதி வரை ஆணைக்குழுவின் சாரதியுடன் விடுவிக்கப்பட்டிருந்தது. இப்பரிசோதனை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டோர் யாவர், பரீட்சிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை போன்றவை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னனென்பது தொடர்பாக எந்தவொரு தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன், அமைச்சிற்காக நுவரெலியாவில் கடமை புரிந்த காலப்பகுதியில் எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் என்பவற்றிற்காக ரூபா 40,410 தொகையும் சேவைக்கட்டணமாக ரூபா 15,960 தொகையும் தனியார் போக்குவரத்து அமைச்சின் நுவரெலியா கூட்டிணைப்பு அலுவலகத்துடன் இணைந்த இலங்கை பெருந்தோட்ட சேவைகள் சங்கத்தின் நிர்வாகச் செயலாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், 2013 ஒக்தோபர் 02 ஆந் திகதிய பீஈடீ/POL/CIR/2013-3 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்படாமையால் 2014 மார்ச் 10 ஆம் திகதி மீளப் பெற்று அதன் பிரகாரம் தயாரித்து கணக்காய்விற்காக 2014 ஆகஸ்ட் 01 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கும் உள்ளபடியான தரவுகளுக்குமிடையே ஒப்பிடும் போது 20 சதவீதத்திலிருந்து 1080 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டதனால் பாதீடு வினைத்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.3 ஆண்டறிக்கைகளை சபைக்குச் சமர்ப்பித்தல்

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 12(3) பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை 2014 ஒக்தோபர் 31 ஆம் திகதி வரை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் தொடர்பாக ஆணைக்குழுவின் தலைவருக்கு அவ்வப்போது தெரியப்படுத்தப்பட்டன. பின்வரும் அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்கல்
(ஆ) கொள்வனவு நடவடிக்கைகள்
(இ) ஒப்பந்த நிர்வாகம்
(ஈ) வாகனப் பயன்பாடு
(உ) முற்பணங்களைப் பெற்றுக்கொள்ளலும் தீர்த்துவைத்தல்களும்
(ஊ) அட்டுறு செலவின ஒதுக்கீடு